www.Padasalai.Net www.Trbtnpsc.Com

| முதல் திருப்புதல் தேர்வு - 2024 | 11 ஆம் வகுப்பு | |
|---|---|---|
| தாவரவியல் | மதிப்பெண்கள் 70 | நேரம் 3.00 மணி |

15 x 1 = 15

I. அனைத்து வினாக்களுக்கும் விடையளி.

1. மகரந்தத் தாள் ஒன்றாக இணைந்து ஒரு தொகுப்பாகக் காணப்படுவது.
   அ) கைனோஸ்டீஜியம் ஆ) சிஞ்சினிசியஸ் இ) சினான்ட்ரஸ் ஈ) பொலினியம்
2. கட்டை என்பது
   அ) இரண்டாம் நிலை சைலம் ஆ) இரண்டாம் நிலை புளோயம்
   இ) இரண்டாம் மெடுல்லரி கதிர்கள் ஈ) இரண்டாம் நிலை புறணி
3. செல் சுழற்சியின் சரியான வரிசை
   அ) G1 - S - G2 - M ஆ) S - M - G1 - G2 இ) M - G1 - G2 - S ஈ) S - G1 - G2 - M
4. தாவரவியலின் தந்தை
   அ) லின்னேயஸ் ஆ) அரிஸ்டாட்டில் இ) ஹைக்கேல் ஈ) தியோஃபிராஸ்டஸ்
5. எம்பிரிவு தாவரம் ஓங்கிய கேமீட்டக தாவர சந்ததியைக் கொண்டது
   அ) ஜிம்னோஸ்பெர்ம்கள் ஆ) டெரிட்டோஃபைட்கள் இ) ஆஞ்சியோஸ்பெர்மகள் ஈ) பிரையோஃபைட்கள்
6. செல் கொள்கையை உருவாக்கியவர்
   அ) பெந்தம் மற்றும் ஹீக்கர் ஆ) பீடல் மற்றும் டாட்டம்
   இ) ஷிலீடன் மற்றும் ஷிவான் ஈ) எங்ளர் மற்றும் பிராண்டல்
7. எதற்கு இடையே ஜோடி சேர்தல் (சினாப்சிஸ்) நடைபெறுகிறது.
   அ) இரண்டு ஒத்த குரோமோசோம்கள் ஆ) mRNA மற்றும் ரைபோசோம்
   இ) ஒரு ஆண் மற்றும் பெண் கேமிட் ஈ) கதிர்கோல் இழைகள் மற்றும் சென்ரோமியர்கள்
8. எந்த வகைத் தாவரங்களில் காப்புச் செல்கள் சப்ளாக் கட்டை வடிவில் காணப்படுகிறது
   அ) மக்காச் சோளம் ஆ) புற்கள் இ) சூரியகாந்தி ஈ) அவரை
9. வறண்ட நிலத்தாவரமான ஒபன்ஷியாவில் எவ்வகை நிராவிப்போக்கு சாத்தியம்?
   அ) லெண்டிசெல் நீராவிப்போக்கு ஆ) க்யூட்டிகள் நீராவிப்போக்கு
   இ) இலைத்துறை நீராவிப்போக்கு ஈ) மேற்கூறிய அனைத்தும்
10. கிளைக்காலைசிஸ் மற்றும் கிரப்ஸ் சுழற்சியினை இணைக்கும் சேர்மம்
    அ) அசிட்டைல் CoA ஆ) சக்சினிக் அமிலம் இ) சிட்ரிக் அமிலம் ஈ) பைருவிக் அமிலம்
11. இலையுதிர்கால இலைகளின் மஞ்சள் நிறமாற்றத்திற்கு காரணமான நிறமி .......
    அ) கரோட்டீன் ஆ. ஃபைகோசயனின் இ) ஃபைகோ எரித்திரின் ஈ) லியூட்டின்
12. இலைத்துலை மூடுவதைத் தூண்டும் தாவர ஹார்மோன் எது?
    அ) அப்சிசிக் அமிலம் ஆ) ஆக்ஸின் இ) சைட்டோகைனின் ஈ) ஜிப்ரலின்
13. ஒரு தாவரத்திற்கு அனைத்துக் கனிமங்களும் வழங்கப்பட்டு Mn செறிவு மட்டும் அதிகமாக இருந்தால் ஏற்படும் குறைபாடு யாது?
    அ) Ca உட்கொள்திறனை மட்டும் அதிகரிக்கும் ஆ) Fe, Mg உட்கொள்திறனை தடுக்கும் ஆனால் Ca தவிர
    இ) Fe, Mg மற்றும் Ca உட்கொள்திறன் தடுக்கும் ஈ) Fe, Mg, Ca உட்கொள்திறனை அதிகரிக்கும்
14. ரோடோஃபைசியின் சேமிப்பு பொருள்
    அ) சயனோஃபைசியின் தரசம் ஆ) ஃப்ளோரிடியன் தரசம் இ) பாராமைலான் தரசம் ஈ) தரசம்
15. வெங்காயத்தின் இரு சொற்பெயர் ..........
    அ) அல்லியம் சீபா ஆ) அல்லியம் சட்டைவம் இ) பாக்சஸ் கரோட்டா ஈ) ராபனஸ் சட்டைவஸ்



CamScanner
Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trbtnpsc.Com

**II. எவையேனும் 6 வினாக்களுக்கு விடையளி. வினா எண். 23 கட்டாய வினா** 6 x 2 = 12

16. துளைக்கட்டை மற்றும் துளைகளற்ற கட்டை வேறுபடுத்துக.
17. ரிச்மாண்டு லாங்க் விளைவு என்றால் என்ன?
18. வேரின் பண்புகளை எழுதுக.
19. லைக்கென்களின் பொதுப்பண்புகள் ஏதேனும் இரண்டினை எழுதுக.
20. நியூக்ளியோசைடு மற்றும் நியூக்ளியோடைடு – வேறுபடுத்துக.
21. டாட்டுரா மெட்டல் தாவர மலரின் சூத்திரமத்தை எழுதுக.
22. பிரையோபைட்டுகளின் வாஸ்குலார் திசுக்களற்ற பூவாத் தாவரங்கள் என அழைக்கப்படக் காரணம் என்ன?
23. பிளாஸ்மோடெஸ்மேட்டா என்றால் என்ன?
24. ஒளிச்சுவாசம், இருள்சுவாசம் – வேறுபாடுகள் ஏதேனும் இரண்டினை எழுதுக.

**III. எவையேனும் 6 வினாக்களுக்கு விடையளி. வினா எண். 32 கட்டாய வினா** 6 x 3 = 18

25. நீராவிப் போக்கின் வகைகளை யாவை?
26. தாவர செல்லுக்கும், விலங்கு செல்லுக்கும் உள்ள வேறுபாடுகள் ஏதேனும் மூன்றினை எழுதுக.
27. பூவடிச்செதிலுடைய, பூக்காம்புச் செதிலற்ற இருபால் மலர் முழுமையான ஐந்தங்க மலர், தனித்த புல்லிவட்டம், தனித்த அல்லிவட்டம், மேல்மட்ட சூலகப்பை கொண்ட மலரின் மலர் சூத்திரம் எழுதுக.
28. புறந்தோல் திசுத் தொகுப்பின் பணிகள் மூன்றினை எழுதுக.
29. உட்கருவின் பண்புகளை எழுதுக.
30. உள்ளீர்த்தல் என்றால் என்ன? எடுத்துக்காட்டு தருக.
31. பூஞ்சை வேரிகளின் முக்கியத்துவங்கள் எவையேனும் மூன்றினைக் குறிப்பிடுக.
32. அமைவிடத்தின் அடிப்படையில் ஆக்குத்திசுகளின் வகைகளை படம் வரைந்து பாகம் குறிக்கவும்.
33. மலரின் படம் வரைந்து பாகங்களைக் குறிக்கவும்.

**IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளி** 5 x 5 = 25

34. அ) கிராம் சாயமேற்றும் முறையின் படிகளை எழுதுக.

(அல்லது)

ஆ) சைட்டோகனின் வாழ்வியல் விளைவுகளை எழுதுக.

35. அ) கிளைட்டோரியா டெர்னேசியாவின் கலைச்சொற்களால் விவரிக்கவும்

(அல்லது)

ஆ) 1) உட்சவ்வூடு பரவல் என்றால் என்ன?
2) உட்சவ்வூடு பரவலை விளக்கும் உருளைகிழங்கு ஆஸ்மாஸ்கோப் சோதனையை விரிவாக எழுதவும்.

36. அ) சாற்றுக்கட்டைக்கும் வைரக்கட்டைக்கும் இடையேயான வேறுபாடுகளை எழுதுக.

(அல்லது)

ஆ) ஸ்டீல் என்றால் என்ன? அதன் வகைகளை விவரிக்கவும்.

37. அ) அகாரிகஸின் வாழ்க்கைச் சுழற்சியை வரைக.

(அல்லது)

ஆ) DNA வின் பண்புகளை எழுதுக.

38. அ) பெண்டோஸ்ஃபாஸ்பேட் வழித்தடத்தின் முக்கியத்துவத்தைக் குறிப்பிடுக

(அல்லது)

ஆ) சுழல் ஒளிபாஸ்பரிகரணம் மற்றும் சுழலா ஒளிபாஸ்பரிகரணம் – வேறுபடுத்துக.



CamScanner
Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com